## இன்றைய Insta - AI உலகில் பகுத்தறியும் மாணவச் செல்வங்களை உருவாக்கிடப்

# பெரும் பணியாற்றும் ஆசிரியர்களைப் போற்றுவோம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் – ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி!

**சென்னை, செப். 7-**

**ஆசிரியர் தினமான நேற்று, ஆசிரியப் பெரு மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து வலை தளத்தில் பதிவிட்ட சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “இன்றைய Insta, AI உலகில் பகுத்தறியும் மாணவச் செல்வங்களை உருவாக்கிடப் பெரும் பணியாற்றும் ஆசிரியர்களைப் போற்றுவோம்!” என்று குறிப்பிட்டார்.**

அவரது வலைதளப் பதிவு வருமாறு:-

கல்வி எனும் அழியாச் செல்வத்தின் அடித்தளத்தில் எதிர்காலத் தலைமுறையை கட்டிக் எழுப்பும் ஆசிரியர் பெருமக்கள் அனைவருக்கும் என் இனிய ஆசிரியர் தின வாழ்த்துகள்.

இன்றைய Insta AI உலகில், Reel எது Real எதுவென சிந்தித்துப் பகுத்தறியும் ஆற்றல் கொண்ட மாணவச் செல்வங்களை உருவாக்கிட, பெரும்பணியாற்றி வரும் ஆசிரியர்களைப் போற்றுவோம்!

இவ்வாறு அப்பதிவில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு இல்லத்தில் சோதனை!

# காழ்ப்புணர்ச்சியின் உச்சத்திற்கே சென்ற த.வெ.க. அரசு!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, செப். 7 -

“கழக முதன்மைச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள் இல்லத்தில் லஞ்ச ஒழிப்புத் துறையை ஏவி விட்டு சோதனை நடத்தும் த.வெ.க. அரசு காழ்ப்புணர்ச்சியின் உச்சத்திற்கே சென்றுள்ளது” என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு பதவி யேற்றது முதல், மக்கள் நலப்பணிகளில் கடுகளவுக்கூட கவனம் செலுத்தாமல் எதிர்கட்சிகளை பழி வாங்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. சட்டப்பேரவையில் அலறவிடும் எதிர் கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலினை, விஜயால் சமாளிக்க முடியவில்லை. இதனால் ஆத்திரமடைந்த விஜய், சட்டமன்ற கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முதல் நாளன்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை கைது செய்து அவரை முடக்க நினைத்தார். இருப்பினும், நீதிமன்றத்தின் குட்டு காரணமாக, உதயநிதி ஸ்டாலின் விவகாரத்தில் த.வெ.க. அரசு பின்வாங்கியது. இந்நிலையில், த.வெ.க. அரசின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக முன்னாள் அமைச்சர் கே.என். நேருவுக்கு சொந்தமான இடங்களில் DVAC சோதனை நடத்தி வருகிறது.

இதேபோன்று, எதிர்க்கட்சி துணைத்தலைவர் கே.என்.நேரு உள்ளிட்டோரும் த.வெ.க. அமைச்சர்களுக்கு உடனுக்குடன் பதிலடி கொடுத்து வருவதால் அவரை முடக்கும் நோக்கிலும் DVAC சோதனையை த.வெ.க. அரசு ஒரு கருவியாக பயன்படுத்தி வருகிறது.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

சட்டமன்றத்தில் தி.மு.கழகத்தை அரசியல் ரீதியாக எதிர் கொள்ள முடியாமல், தொடர்ந்து அவதூறுகளையும் திசைதிருப்பல் நாடகங்களையும் அரங்கேற்றி வந்த தவெக அரசு, தற்போது காழ்ப்புணர்ச்சியின் உச்சத்திற்கே சென்று, கழக முதன்மைச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான கே. என்.நேரு அவர்களைப் பழிவாங்கப் பார்க்கிறது.

மிரட்டல்களுக்கும் சோதனைகளுக்கும் பணிந்து போகும் இயக்கம் தி.மு.கழகம் அல்ல. எதிர்க்கட்சியின் குரல்வளையை நெரிப்பதற்காக, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் இந்த ஜனநாயக விரோத த.வெ.க. அரசின் நடவடிக்கைகளைப் பார்த்து தி.மு.கழகம் ஒருபோதும் அஞ்சாது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## த.வெ.க. வழக்கம் போல் ரீல்ஸ்!

# பேரவையில் முதல்முறையாக பெண் மாற்றுத் தலைவர் என்பது உண்மை அல்ல!

## கழக ஆட்சியில் 2009–ஆம் ஆண்டே பேரவையை காங்கிரஸ் – மார்க்சிஸ்ட் எம்.எல்.ஏ.க்கள் வழிநடத்தியுள்ளனர்!

நாகர்கோவில். செப். 7 -

தமிழக சட்டமன்றத்தில், பேரவைத் தலைவர் இல்லாதபோது பேரவை துணைத்தலைவர் அவையை வழி நடத்துவார். இவர்கள் இருவரும் இல்லாதபோது மாற்று பேரவைத் தலைவர்கள் அவையை வழி நடத்துவார்கள். அந்த வகையில் கடந்த 2ம்தேதி தமிழக சட்டசபையின் மாற்று பேரவை தலைவராக (மாற்று சபாநாயகர்) தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்த திருப்பூர் வடக்கு தொகுதி பெண் எம்.எல்.ஏ. சத்யபாமா நியமிக்கப்பட்டு சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து சபையை நடத்தினார்.

த.வெ.க. ஆட்சியில் தான், தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில் முதல் முறையாக பெண் உறுப்பினர் ஒருவர் சபையை நடத்தி உள்ளார் என சமூக வலைதளங்களில் அந்த கட்சியினர் பரப்பி வருகிறார்கள். ஆனால் இதற்கு முன், கடந்த 2006 - 2011ல் தி.மு.க. ஆட்சியின் போது, அப்போதைய திருவட்டார் தொகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ.வாக இருந்த லீமா ரோஸ் சபையை நடத்தியுள்ளார்.




கடந்த 2009ல் சட்டமன்ற கூட்டத்தொடரில் சமூக நலத்துறை மானிய கோரிக்கை நடைபெற்றது. அந்த சமயத்தில் சபாநாயகர், துணை சபாநாயகர் இல்லாததால், லீமா ரோஸ் மாற்று சபாநயகராக இருந்து சிறிது நேரம் சபையை நடத்தினார். எனவே பெண் உறுப்பினர் சபையை நடத்துவது இது முதல் முறை அல்ல என சமூக வலைதளங்களில் பலரும், த.வெ.க.வுக்கு பதிலடி கொடுத்து வருகிறார்கள். த.வெ.க.வினர் ரீல்ஸ் போட்டு ரீல் விடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களும் எச்சரித்து உள்ளனர்.

**லீமா ரோஸ் பேட்டி!**

இதுகுறித்து முன்னாள் எம்.எல்.ஏ. லீமாரோஸ் கூறுகையில், “கடந்த 2009ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரின் போது அப்போதைய சபாநாயகர் ஆவுடையப்பன் சபையில் இல்லை. துணை சபாநாயகரும் இல்லை. அப்போது எனது கட்சி சார்பில் மாற்று சபாநாயகருக்கான பட்டியலில் எனது பெயர் இருந்தது. அதன்பேரில் சமூக நலத் துறை மானிய கோரிக்கையின் போது நான் அமர்ந்து சபையை நடத்தும் வாய்ப்பை பெற்றேன்.

எனவே பெண் உறுப்பினர்கள் சபையை நடத்துவது இது முதல் முறை அல்ல. காங்கிரஸ் கட்சியின் யசோதாவும் மாற்று தலைவராக இருந்துள்ளார். அதற்கு முன் வேறு சில பெண் உறுப்பினர்களும் சபையை நடத்தியதாக கூறுகிறார்கள். அது தொடர்பான விபரம் எனக்கு தெரிய வில்லை. த.வெ.க. அரசு தான் ஏதோ, வரலாற்று சாதனை செய்தது போல் பொய் பிரசாரம் செய்கிறார்கள். சட்டசபையில் உள்ள மூத்த அதிகாரிகள், மூத்த உறுப்பினர்களுக்கு இது பற்றிய விபரங்கள் முழுமையாகத் தெரியும்” என்றார்.



# நாலுமுழம்...

பொங்கலுக்கு
இனிமேல்
வேஷ்டி
எட்டு முழம்
கிடையாதாம்
நாலு முழம் தானாம்..

அஞ்சு வருஷம் முடியும் போது
அது கோவணமா கூட ஆகலாம்..

சிந்திந்து ஓட்டுப் போடுவதற்கு பதில்

ஓட்டுப் போட்டுவிட்டு
சிந்திக்கும்
பரிதாபத்தில்
மக்கள்...

**என்னநாஞ்**
**சொல்றது**




**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

## சிந்தனையைத் தூண்டிய திராவிட எழுத்துகள்

# வாழ்க்கைக்கு வெளிச்சம் பாய்ச்சும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் ‘குடும்ப விளக்கு’!

“நல்ல குடும்பம் பல்கலைக் கழகம். குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். முன்னேற்றம் உடைய குடும்பம் எப்படி இருக்கும் என்பது பற்றிய என் எண்ணமே இந்தச் சிறிய நூல்“ என்று தன்னுடைய குடும்பவிளக்கு நூல் பற்றிய அறிமுகத்தில் எழுதியிருக்கிறார் பாவேந்தர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.




**“இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை.**
**இரவு போர்த்த இருள் நீங்கவில்லை.**
**ஆயினும், கேள்வியால் அகலும் மடமைபோல்**
**நள்ளிரவு மெதுவாய் நகர்ந்து கொண்டிருந்தது.**
**தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த**
**கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது.**
**புலர்ந்திடப் போகும் பொழுது, கட்டிலில்**
**மலர்ந்தன அந்த மங்கையின் விழிகள்”**

- என்று ‘குடும்ப விளக்கு’த் தொடங்குகிறது.

படிப்பும் பகுத்தறிவும் கொண்டு கேள்விகளை எழுப்பினால் மடமை விலகி அறிவுத் தெளிவது போல, இருள் விலகி, பொழுது மலரும் அதிகாலை நேரத்தில் இல்லத்தரசி கண் விழித்துத் தன் பணிகளைத் தொடங்குகிறார் என்கிறார் கவிஞர்.

எல்லாப் பெண்களையும் போல, குடும்ப விளக்கில் கவிஞர் காட்டும் அந்த இல்லத்தரசியும் சமையல் பணி, வீட்டு வேலை எல்லாவற்றையும் கவனித்தாலும், அவரின் தனித்திறமை எது என்பதையும் கவிஞர் சுட்டிக்காட்டுகிறார்

**பாடம் சொல்லப் பாவைத் தொடங்கினாள்.**
**அவள் வாத்திச்சி, அறைவீடு கழகம்.**
**தவழ்ந்தது தங்கத் தமிழ்ச்சுவை. அள்ளி**
**விழுங்கினர் பிள்ளைகள்.**

வீட்டில் குழந்தைகள், அம்மா சமைத்த ருசியான உணவை மட்டும் அள்ளி விழுங்கவில்லை. அவள் சொல்லித் தந்த பாடத்தையும், கற்றுக் கொடுத்த தமிழ்ச் சுவையையும் அள்ளி விழுங்குகிறார்கள். இதன் மூலம், அந்த இல்லத்தரசி படித்தவராக இருக்கிறார். அதனால் பிள்ளைகளுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கிறார் என்று கல்வியின் அவசியத்தை உணர்த்தி, கல்வி ஒளி பெற்ற தலைமுறையைத் தொடர்ந்து உருவாக்க வேண்டும் என்று அன்றே வலியுறுத்தியிருக்கிறார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு, கணவன் தன் கடைக்குச் செல்ல உதவிகள் செய்தபிறகு, ஊர் சென்று திரும்பிய மாமனாருக்கும் வேண்டிய உதவிகள் செய்துவிட்டு, மதிய உணவை சமைக்கத் தொடங்குகிறார் அந்த இல்லத்தரசி.

**கொண்டவர்க்கு எது பிடிக்கும்?**
**குழந்தைகள் எதை விரும்பும்?**
**தண்டூன்றி நடக்கும் மாமன்**
**மாமிக்குத் தக்கது என்ன?**
**உண்பதில் எவர் உடம்புக்கு**
**எது உதவாது என்றெல்லாம்**
**கண்டனள், கறிகள் தோறும்**
**உண்பவர் தம்மைக் கண்டாள்.**

கணவனுக்கு எது பிடிக்கும்? பிள்ளைகள் எதை விரும்பிச் சாப்பிடும்? வயதான மாமனார் மாமியாரின் உடம்புக்கு ஏற்ற உணவு எது? எதையெதை தவிர்க்க வேண்டும் என்பதையெல்லாம் கவனித்து சமைக்கும்போது, இல்லத்தரசியின் பார்வையில் ஒவ்வொரு காய்கறியிலும் அதை விரும்பிச் சாப்பிடுபவர்களின் முகம் தெரிகிறது என்று நயம்படப் படம்பிடித்துக் காட்டுகிறார் கவிஞர். உணவே மருந்து என்பதை அழகாக விளக்குகிறார்.

அது மட்டுமா? மதியம் வீட்டுக்குச் சாப்பிட வந்த கணவன், “கொஞ்ச நேரம் நீ போய்க் கடையைப் பார்த்துக்கொண்டால், அங்கே வேலை செய்பவர்கள் அவர்களின் வீட்டுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு வருவார்கள்“ என்று மனைவியிடம் சொல்ல, வீட்டு நிர்வாகத்தைச் சிறப்பாகச் செய்த பெண்மணி, கடைக்குச் சென்று அங்கு வணிகத்தையும் சிறப்பாகக் கவனித்து, கணவன் கடைக்கு வந்ததும் அவனிடம் கணக்குகளை முறையாகப் ஒப்படைத்துத் திரும்புகிறார்.

இரவு நேரம். எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு, குழந்தைகள், பெரியவர் ஆகியோர் உறங்குவதற்குரிய வசதிகளையும் செய்துவிட்டு, மாட்டுக் கொட்டகையையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, கதவைத் தாழிட்டு, அறைக்கு வருகிறார் இல்லத்தரசி. அங்கே கணவன் படுத்திருக்கிறார்.

**தொண்டையினில் ஒன்றுமே அடைக்க வில்லை.**
**துணைவனவன் சிறுகனைப்பு கனைக்கலுற்றான்.**
**அண்டையிலே மங்கை போய், “அத்தான்” என்றாள்.**
**அத்தானா தூங்கிடுவான். “உட்கார்“ என்றான்.**

இருவருக்குமான இனிய நேரம் அது. வீட்டுச் செலவுகளை எதிர்கொள்ள கணவன் சம்பாதித்துத்தர, வீட்டு வேலைகளையும் குழந்தைகள் பராமரிப்பையும் மனைவி கவனித்துக்கொள்ள, ஒரு நாள் முழுவதும் முடிந்து, ஓய்வான இரவுப் பொழுது. அப்போது கணவனிடம் மனைவி கேட்கிறார்,

**“அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்**
**அடுக்கடுக்காய் நமதுநலம் சேர்ப்ப தல்லால்**
**இதுவரை பொதுநலத்துக்கு என்ன செய்தோம்?”**
**என்பதை நாம் நினைத்துப் பார்ப்பதுவுமில்லை.**

என்கிறார். ஒரு பெண்மணி தனக்காக எதையும் எதிர்பார்க்காமல், வீட்டில் உள்ளவர்களைக் கவனித்துக் கொள்வதற்காகவே எல்லாப் பணிகளையும் இழுத்துப் போட்டு செய்துவிட்டு, இரவில் கிடைத்த தனிமையான நேரத்தில்கூட கணவனிடம், “பொதுநலத்துக்கு நாம் என்ன செய்தோம்?” என்று கேட்கிற பண்பு கொண்டவராக இருக்கிறார். தமிழர் நலத்துக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று கணவன் சொல்கிறார். அதன் பிறகே அவர்களின் இனிய நேரம் தொடங்குகிறது.

அந்தக் ‘குடும்ப விளக்கு’ வீட்டுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் வெளிச்சம் தரக்கூடியதாக இருக்கிறது. தமிழர்களின் வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதை விளக்கும் இந்தக் கவிதை நூல் பற்றி புரட்சிக்கவிஞர் சொல்வது இதுதான், மிகச் சிறிய குறள் ஓவியம் ‘குடும்ப விளக்கு’.